Please check the examination details below before entering your candidate information

| Candidate surname | Other names |
|---|---|
| | |

**Pearson Edexcel International GCSE**

Centre Number: | | | | | |

Candidate Number: | | | | |

# Thursday 23 May 2019

Morning (Time: 2 hours 30 minutes) | Paper Reference **4TA1/01**

# Tamil

## Paper 1: Reading, Writing and Translation

**You do not need any other materials.**

Total Marks

## Instructions

- Use **black** ink or ball-point pen.
- **Fill in the boxes** at the top of this page with your name, centre number and candidate number.
- There are **three** sections you must answer:
  – Section A Questions 1–4
  – Section B Question 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c)
  – Section C Question 7.
- Answer the questions in the spaces provided
  – *there may be more space than you need.*
- You must **not** use a dictionary.

## Information

- The total mark for this paper is 100.
- The marks for **each** question are shown in brackets
  – *use this as a guide as to how much time to spend on each question.*

## Advice

- Read each question carefully before you start to answer it.
- Check your answers if you have time at the end.

*Turn over* ▶


©2019 Pearson Education Ltd.
1/1/1/1/1/



Pearson

**SECTION A: READING**

**Answer ALL questions.**

**Write your answers in the spaces provided.**

**Multiple-choice questions must be answered with a cross in a box ☒. If you change your mind about an answer, put a line through the box ☒ and then mark your new answer with a cross ☒. Open-response questions do not have to be written in full sentences and you may respond using single words or phrases.**

**1** தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி **தமிழில்** கேள்விகளுக்குரிய சரியான எழுத்தைப் பெட்டியில் இடுக.

**பாடசாலைச் சுற்றுலா**

எங்களுடைய வகுப்பாசிரியர் எங்களைச் சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்றார். எங்கள் பாடசாலைக்கு அருகில் இருக்கும் பூங்காவிற்கு நாங்கள் சென்றோம். உணவு கொண்டு வருமாறு எங்களுக்குச் சொல்லி இருந்தார்கள். எங்களில் சிலர் பழங்கள் கொண்டு வந்தார்கள், சிலர் சிற்றுண்டி கொண்டு வந்தார்கள். நாங்கள் மட்டையும் பந்தும் எடுத்துச் சென்றோம்.

காலையில் நாங்கள் பாடசாலையில் ஒன்று கூடினோம், பேருந்து பூங்காவிற்கு செல்வதற்குப் புறப்பட்டது. நாங்கள் அங்கே சென்றதும், பல விளையாட்டுக்களை விளையாடினோம். அதன் பிறகு பூங்காவைச் சுற்றிப் பார்ப்பதற்கு அவர் எங்களைக் கூட்டிச் சென்றார்.

நாங்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி இருந்து பலதரப்பட்ட மதிய உணவைச் சாப்பிட்டோம். பின்னர் ஆசிரியர் எங்களுக்கு நல்ல கதைகளைச் சொன்னார். நாங்கள் எல்லோரும் கூடி இருந்து கேட்டோம். ஒரு மணிநேரத்திற்குப் பின்னர் அவர்கள் மீண்டும் எங்களைப் பேருந்துக்கு அழைத்துச் சென்றார்கள். நாங்கள் எல்லோரும் சந்தோஷமாகப் பாடசாலைக்குத் திரும்பி வந்தோம்.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

| | | | |
|---|---|---|---|
| **A** நண்பர்கள் | **B** பூங்காவிற்குச் | **C** காலையில் | **D** சந்தை |
| **E** மதிய | **F** பேருந்து | **G** உணவுகள் | **H** கதைகள் கேட்டல் |
| **I** சந்தோஷமானது | **J** குதூகலமான | **K** பொருட்களை | **L** அனுபவித்தார்கள் |
| **M** வாசித்துக் | | | |

| | | |
|---|---|---|
| **உதாரணம்** | ஒரு சுற்றுலாவிற்குப் பள்ளி குழந்தைகள் … சென்றார்கள். | **B** |
| **1** (a) | அவர்கள் பள்ளியிலிருந்து … சுற்றுலாவிற்குச் சென்றார்கள். | |
| **1** (b) | பள்ளிக்கு வெளியே நண்பர்களுடன் நேரம் செலவழிப்பது மிகவும் … ஆகும். | |
| **1** (c) | குழந்தைகள் தம்முடன் பலவிதமான … எடுத்துச் சென்றனர். | |
| **1** (d) | நிறைய விளையாடியதன் பின் அவர்கள் … உணவை உண்டார்கள். | |
| **1** (e) | எமது ஆசிரியர் சில அழகான கதைகளை … காட்டினார். | |
| **1** (f) | சுற்றுப்பிரயாண முடிவில் குழந்தைகள் களைப்பாக இருப்பினும், சுற்றுலாவை … | |

**(Total for Question 1 = 6 marks)**

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**2** சரியான பதில்களுக்கு 8 சதுரத்தில் புள்ளியிடவும். சில கேள்விகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் புள்ளியிட வேண்டியிருக்கும் அல்லது எதையுமே இடாதிருக்க வேண்டியிருக்கலாம்.

**சமூக ஊடகம்**

**போல்**




நான் நினைக்கின்றேன், உறவினர்களுடனும் நண்பர்களுடன் தொடர்பில் இருப்பதற்குச் சமூக ஊடகங்கள் சிறந்த வழியாக இருக்கின்றது. இது பொழுதுபோக்காக இருக்கின்றது என்பதில் சந்தேகமே இல்லை. இது உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது மேலும் அநேகமானவர்கள் செய்ய வேண்டிய வேலைகளில் அவர்களின் கவனத்தை இழக்கச்செய்து பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**சுவர்ணா**



சமூக ஊடகத்தளமானது தனிநபருடைய தகவல்களையும் கல்விசார் விடயங்களையும் பெரும் எண்ணிக்கையிலும், பெரிய அளவிலும் பகிர்ந்து கொள்வதற்கு எங்களை அனுமதிக்கின்றது. எவ்வாறாயினும், இதை அதிகம் பயன்படுத்துகையில் சமூக ஊடகங்கள் ஒருவரின் நலனைப் பாதிக்கக் கூடும். இது தனிநபருடைய நலனை மட்டுமல்லாது அல்லது சமூகத்தின் நலனையும் நாளடைவில் பாதிக்கக் கூடும்.

**கவிதா**



சமூக ஊடகங்கள் உலகில் நுழைவதற்கு சிறந்த கருவிகள் என நான் நினைக்கின்றேன். நண்பர்களுடனும் குடும்பத்தினருடன் தொடர்பில் இருப்பதற்கு இது வசதியாக இருப்பதால் நான் இதை விரும்புகின்றேன். முகத்திற்கு முகம் பார்த்துக் கதைக்கும் கலந்துரையாடல்களின் முக்கியத்துவத்தை இனிக் கருத்தில் எடுப்பார்கள் என நான் நினைக்கவில்லை. அத்தோடு ஒரு விசைப்பலகைக்குப் பின்னால் மக்கள் ஒளியும் போது அவர்கள் பிறரின் எண்ணங்களை முரட்டுத்தனமாக / குறைத்து மதிப்பிடக் கூடும் என நான் நினைக்கிறேன்.

DO NOT WRITE IN THIS AREA

| | | போல் | சுவர்ணா | கவிதா |
|---|---|---|---|---|
| **உதாரணம்** | சமூக ஊடகத்தில் பாதிப்பும் உண்டு. | ☒ | ☒ | ☒ |
| **A** | மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வழி. | ☐ | ☐ | ☐ |
| **B** | கல்வித் தகவலைப் பகிர்ந்து கொள்ள உதவும். | ☐ | ☐ | ☐ |
| **C** | பொழுது போக்குக்கிற்குச் சமூக ஊடகங்கள் ஒரு சாதனமாகும். | ☐ | ☐ | ☐ |
| **D** | சமூக ஊடகங்கள் உலகில் பிரச்சினைகளை உருவாக்குகின்றன. | ☐ | ☐ | ☐ |
| **E** | சமூக ஊடகங்கள் தனிமைப்படுத்துகிறது. | ☐ | ☐ | ☐ |
| **F** | இது மக்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்கலாம். | ☐ | ☐ | ☐ |
| **G** | சமூக ஊடகங்கள் மட்டுமே தொடர்பாடலை ஏற்படுத்தும். | ☐ | ☐ | ☐ |

**(Total for Question 2 = 8 marks)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**3** உடல்நலம் மற்றும் ஆரோக்கியம் பற்றித் தரப்பட்டுள்ள தகவலைப் படிக்கவும். புள்ளியிடப்பட்ட இடத்தை உங்கள் மொழியில் அல்லது எண்களில் பதில் தரவும்.

**ஆரோக்கியமான வாழ்க்கை முறை**

எங்களுடைய நவீன வாழ்க்கை முறையானது காலத்தோடு மேலும் விரைவானதாகிவிட்டது. இதன் காரணமாக எங்களுடைய சமூக பொருளாதார வாழ்க்கையானது பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

நெருக்கடியான பட்டின வாழ்க்கையில், உடல் நலத்தையும், வளத்தையும் சமாளிப்பது சவாலாக உள்ளது. நேரமின்மையின் காரணமாக தொடர்ந்து உடற்பயிற்சி செய்து வருவதும் சிரமமாக உள்ளது.

விளையாட்டுகளில் பங்கு எடுப்பது தனி நபரின் நலனுக்கு முக்கியமானதாகிறது. இது சமமான ஆரோக்கிய வாழ்க்கை வாழ்வதற்கான ஒரு முறையாகிறது. உடற்பயிற்சியானது உடல் ஆரோக்கியத்திற்கு மட்டும் உதவுவதில்லை, இது மனத்தையும் ஆறுதலாக வைத்திருக்கின்றது. அதிகமான மக்கள் நீச்சல், ஓடுதல், மற்றும் மிதிவண்டி ஓட்டுதலை தங்கள் ஆரோக்கியத்தைப் பேணிக் காப்பதற்காகக் கடைப்பிடிக்கின்றனர். தொடர்ந்து உடற்பயிற்சி செய்தல் உடல் நலத்திற்கு ஆரோக்கியம் விளைவிக்கும்.

இதுபோன்ற சவால்களை எதிர்கொள்ளவும் ஏனைய மக்களுக்கு உதவவும் உலகத் தலைவர்கள் மிகவும் முதன்மையாக இருக்கிறார்கள். இதை மேற்கொள்வதற்காக அவர்கள் தங்கள் தினசரி வாழ்க்கையில் நடைப் பயிற்சிக்கும், வேலைகளுக்கு மிதிவண்டியில் செல்வதையும் உலகளவில் ஊக்குவிக்கின்றனர். சிலர் மேலும் இதனை ஊக்குவிப்பதற்காக உடற்பயிற்சி நிலையத்திற்கும் இலவச அனுமதி அளிக்கின்றனர். இன்றைய தலைமுறையினர் நவீன உடற்பயிற்சிக் சாதனக்கருவிகளை உபயோகிப்பதன் மூலமும் பயன் அடைகின்றனர்.

ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதற்காக தன்னார்வத்துடன் “பார்க் றன்” போன்றவைகளிலும் பங்கேற்று வருகின்றனர்.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**உதாரணம்**: நவீன காலத்தில் வாழ்க்கை முன்னைய காலத்தை விட **விரைவானதாகி விட்டது.**

(a) பரபரப்பான வாழ்க்கை முறை ........................................................ மற்றும் ........................................................ பாதிக்கிறது. **(2)**

(b) நவீன சமுதாயத்தில் மக்களுக்கு ........................................................ மற்றும் ........................................................ முக்கிய சவாலாகிறது. **(2)**

(c) மக்கள் திடகாத்திரமாக இருப்பதற்கு ........................................................ பங்கு பெற வேண்டும். **(1)**

(d) மக்கள் திடகாத்திரமாக இருப்பதற்கு ........................................................ மற்றும் ........................................................ ஆகிய இரண்டு பிரபலமான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். **(2)**

(e) ஒழுங்காக உடற்பயிற்சி செய்வதற்கு ........................................................ கண்டுபிடிப்பது கடினமாக உள்ளது. **(1)**

(f) சில முதலாளிகள் தமது ஊழியர்கள் திடகாத்திரமாக இருப்பதற்காக ........................................................ அங்கத்துவ அட்டை அளிக்கின்றனர். **(1)**

(g) இளைஞர்கள் தம்மைத் திடமாக வைத்திருப்பதற்கு ........................................................ உபகரணங்களைப் பயன்படுத்துகிறார்கள். **(1)**

(h) உடற்பயிற்சிகள் உடல் நல்வாழ்வை அளிப்பது மட்டுமல்லாமல் மேலும் உங்களை ........................................................ வைத்திருக்க உதவுகின்றன. **(1)**

(i) உடல் நலத்தை ஊக்குவிப்பதற்கு ........................................................ என்பது ஒரு சிறந்த உதாரணமாகும். **(1)**

**(Total for Question 3 = 12 marks)**



DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

4 தாய் மொழிக் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய பின்வரும் கட்டுரையைப் படிக்கவும்.

## தாய்மொழியில் கல்வி

ஒரு மொழி தகவல் தொடர்பு வழிமுறை மட்டுமல்ல, அதனுடன் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் சுமக்கின்றது. கலாசாரத்துடன் பொருந்தும் ஒரு கல்வி இளம் மனதில் விரைவாகச் சென்று நேர்மையான ஒருங்கிணைப்பை உறுதி செய்யும்.

தாய்மொழியில் கல்வி கற்பது தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்குப் பயனுள்ளதாக இருக்குமா எனப் பெற்றோர்களுக்கு இருக்கும் சந்தேகத்திற்கு இன்று பதில் அளிக்கவேண்டியுள்ளது. உண்மையில் இதற்குப் பதிலளிப்பதற்கு முன்னர் இதனை விரிவாகப் பார்க்க வேண்டியுள்ளது. தாய்மொழியில் கல்வி பயின்ற குழந்தைகள் உடனடியாக மொழியைப் புரிந்து கொண்டு சமூகத்தில் முழுமையாகப் பங்கேற்கமுடியும்.

தமிழை இரண்டாவது மொழியாகக் கற்பவர்களை விட அதில் கல்வி பயில்பவர்களுக்குத் தமிழ் மொழியில் நல்ல புரிதல் உண்டு. இதே மொழியில் ஆக்கத் திறனுடன் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இது பயனை விளைவித்து, மாணவர்களின் சிந்தனையையும் ஆக்கத் திறனையும் மேம்படுத்த உதவுகிறது.

இதுமட்டுல்லாது தாய்மொழியில் கல்வி மூலம் மட்டுமே அதிக சிந்தனை உருவாக்கப்பட முடியும். வெவ்வேறு கோணங்களில் இருந்து பிரச்சினைகளைக் காணும் திறனையும் அதிகப்படுத்தும்.

எந்தவொரு வளர்ந்த நாடும் தாய்மொழிக் கல்விக்கு ஆதரவளிக்க வேண்டும். நீங்கள் வெவ்வேறு மொழிகளில் கற்றுக்கொள்ளலாம் என்றாலும், உங்களுடைய சிந்தனைச் செயல்முறை தாய்மொழியில் மட்டுமே இருக்கக்கூடும். இவ்வாறு திறம்பட மொழியைப் பராமரிக்கக் கூடிய நம்பிக்கையும், பெருமை உணர்வையும், தாய்மொழியில் கற்றுக் கொள்ளும் திறனையும் நாட்டுநலனையும் மேம்படுத்தும்.

எனவே தாய்மொழியில் பயிற்றுவித்தல் பல்வேறு கலாசாரங்களை முழுமையாகப் புரிந்து கொள்ள உதவுகிறது.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

(a) தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி **தமிழ் மொழியில்** கேள்விகளுக்கு பதில் எழுதவும். நீங்கள் முழு வசனத்தில் பதில் எழுதத் தேவையில்லை.

(i) தாய்மொழிக் கல்வி மூலம் கற்பிப்பது அவர்களுக்கு நலம் பயக்குமா?

**(1)**

..................................................

(ii) கட்டுரையில் இருந்து மொழிகள் கற்பதின் இரண்டு பயன்களைத் தரவும்.

**(2)**

1 ..................................................

2 ..................................................

(iii) தாய்மொழி மூலம் கல்வி கற்பதின் இரண்டு பயன்களைத் தருக.

**(2)**

1 ..................................................

2 ..................................................

(iv) ஏன் தாய்மொழிக் கல்வி என்பது மாணவர்களின் கல்வி கற்றலின் முக்கியத் திறன் பகுதியாகும்?

**(1)**

..................................................

(v) தாய்மொழிக் கல்வி கற்பிப்பதின் இரண்டு பயன்களைத் தரவும்?

**(2)**

1 ..................................................

2 ..................................................

(vi) தாய்மொழியில் கற்பிப்பது பற்றிய பெற்றோர்களின் கருத்தினை இரண்டு காரணங்களுடன் தருக.

**(2)**

1 ..................................................

2 ..................................................

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

(b) இருவருக்கிடையே **தாய்மொழிக் கல்வி பற்றிய விவாதக்** கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. அவர்கள் கருத்தைத் தரவும்.

**மலர்** - சிறுவர்கள் தங்களின் தாய்மொழியை அறிந்து கொள்ள வேண்டும். தாய்மொழியில் தேர்ச்சி அற்று இருப்பது அவர்களின் உற்றார் உறவினர்களுக்குமான தொடர்புகள் அற்றுப் போய்விடுகின்றமைக்கான சந்தர்ப்பம் அதிகமாக இருக்கின்றது என்று நான் எண்ணுகிறேன்.

முதல் தலைமுறை குடியேறியவர்கள் எந்தச்சூழலில் வாழ்ந்தாலும் அவர்கள் தாய் மொழியில் தேர்ச்சி பெற்று இருந்தால் தன்னுடைய மூதாதையர்களின் பூர்வீக அடையாளத்தைத் தெரிந்து கொள்வதற்கும், அதனைப் பேணிப்பாதுகாக்க முடிகிறது.

குழந்தை, தாயின் மொழியைக் கற்பதற்கு பிறப்பின் காரணமாக. மொழிகளுக்கு உள்ளேயே எல்லாக் காலங்களும் மறைந்துள்ளன எனவும் உணர முடியும். ஒவ்வொருவரும் தன் தாய் மொழியை நன்கு அறிவதூடாகவே மொழிக்குள் மறைந்திருக்கும் காலத்தை அறிந்து கொள்ள முடியும். எனவே நான் தாய்மொழிக் கல்வி பயிலுவதையும் பயிற்றுவிப்பதையும் முழுமையாக ஆதரிக்கின்றேன்.

**அகத்தியன்** - தாய் மொழியாக ஆங்கிலத்தை கொண்டிராதவர்களுக்கும் ஆங்கிலத்தை முதலில் கற்றுக்கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதால் உயர்கல்வி கற்பதற்கு ஆங்கிலம் ஒரு தடையாக இருக்காது என எண்ணுகிறேன்.

தாய்மொழி எந்த மொழியாக இருந்தாலும் அவர்கள் வாழும் சூழலில் ஆங்கிலம் பாவனையில் இருந்தால், சிறுவர்கள் தங்கள் சமூகத்தை ஆங்கில மொழியூடாகவே அறிந்து கொள்வர்கள். ஏனெனில் பிள்ளைகள் தங்கள் பெற்றோரோடு இருப்பதைக் காட்டிலும் வேறு சூழலில் இருப்பதே இன்று அதிகமாகக் காணப்படுகின்றது. மொழியின் உள்ளடக்கம் புரியாவிட்டால் மொழி கற்பது இன்னும் கடினமானதாகிவிடும். பெரும்பாலும் குழந்தைகள் வெறுமனே கற்பனை மூலம் சிறிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதோ அல்லது புரிந்துகொள்வதோ இல்லை. பாவனையில் இல்லாத தாய் மொழி கற்பதற்கு அதிக கவனம் செலுத்தத் தேவை இல்லை. இதனால் எந்த ஒரு பயனும் இருப்பதாக நான் கருதவில்லை.

மொழி என்பது இந்த உலகில் வாழ்வதற்கு தேவையான ஒரு கருவி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் அது தாய்மொழியாக இருக்க வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இருப்பதாக நான் கருதவில்லை.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

(i) இருவருக்கிடையே ஆன கருத்துகள் தரப்பட்டுள்ளன. அவர்கள் கருத்தைத் தரவும்.

- மலர் குழந்தைகளின் கற்றல் பற்றி என்ன சொல்கிறார்? **(1)**
- போதனைகள் விளங்காத போது மொழியின் விளைவு என்ன? **(1)**

........................................................................................................................................................................................................

........................................................................................................................................................................................................

(ii) இருவருக்கிடையே ஆன கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. அவர்கள் கருத்தைத் தரவும்:

- இரண்டாவது மொழியைக் கற்றுக் கொள்வதற்கு முன் மாணவர்கள் என்ன செய்ய வேண்டும்? **(1)**
- அகத்தியன் ஆங்கிலத்தை முதன் மொழியாகக் கற்க ஏன் பரிந்துரை செய்கிறார். **(1)**

........................................................................................................................................................................................................

........................................................................................................................................................................................................

**(Total for Question 4 = 14 marks)**

**TOTAL FOR SECTION A = 40 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

## SECTION B: WRITING

Answer Question 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c).

**Write your answers in the spaces provided.**

**5** **தமிழில்** 55 சொற்களுக்குள் உங்களின் சமீபப் பயணத்தைப் பற்றி நண்பருக்கு ஒரு மின்னஞ்சல் எழுதவும்.

கீழே குறிப்பிட்டுள்ள அனைத்து வார்த்தைகளும் பயன்படுத்தப்பட வேண்டும்.

**சமீபப் பயணம்**

போக்குவரத்து

நினைவுகள்

பிரபல்யமான இடங்கள்

உணவு

**(14)**

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**(Total for Question 5 = 14 marks)**

**6** பின்வரும் மூன்று தலைப்புக்களில் இருந்து ஒன்றைத் தேர்வு செய்து அதுபற்றி **தமிழில்** 90 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதவும்.

விருப்பத்தேர்வு **1**

(a)



படத்திலுள்ள சிற்றுண்டி பற்றி ஒரு கட்டுரை எழுதுக.:
தரப்பட்டிருக்கும் தகவல்கள் உங்கள் பதில்களில் இருக்க வேண்டும்

- இதுபோன்று வேறு வகையான சிற்றுண்டி
- பெரும்பாலானவர்கள் தங்கள் தேநீர் இடைவேளையில் இதைச் சாப்பிடுவார்கள்
- இதைச் செய்வதற்கு வேண்டிய பொருட்கள்

**(26)**

விருப்பத்தேர்வு **2**

(b) புவி வெப்பமடைதல் பற்றி ஒரு கடிதம் எழுதுக

தரப்பட்ட தகவல்கள் உங்கள் பதில்களில் உள்ளடக்கப்பட்டனவாக இருக்க வேணடும்.

- புவி வெப்பமடைதலினால் ஏற்படும் விளைவுகள்
- புவி வெப்பமடைவதற்கான காரணங்கள்
- புவி வெப்பமடைவதைத் தடுப்பதற்கான வழிவகைகள்

**(26)**

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

விருப்பத்தேர்வு **3**

(c) சகோதரனின் திருமணத்தைப் பற்றி உங்கள் நண்பருக்கு மின்னஞ்சலை எழுதுங்கள் - தரப்பட்டிருக்கும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

- நிகழ்வைப் பற்றிய அடிப்படைத் தகவல்
- திருமண மண்டப அலங்காரங்கள்
- விருந்தினரின் எண்ணிக்கை

**(26)**

**Indicate which question you are answering by marking a cross ☒ . If you change your mind, put a line through the box ☒ and then indicate your new question with a cross ☒ .**

**Question 6(a)** ☒ **Question 6(b)** ☒ **Question 6(c)** ☒

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**(Total for Question 6 = 26 marks)**

**TOTAL FOR SECTION B = 40 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

## SECTION C: TRANSLATION INTO TAMIL

**Write your answer in the space provided.**

**7** பின்வரும் கட்டுரையைத் **தமிழில்** மொழிபெயர்க்கவும்.

> Sabaragamuwa is one of the nine provinces of Sri Lanka with a vast variety of landscapes. Due to the high rainfall, high elevation and low-temperature it is one of the best places for tea cultivation in the country.
>
> Balangoda is a leading city in the region with a number of various plantations. Hence, the agricultural history of this fertile land dates back to many hundreds of years. The famous Ceylon Tea comes from this part of the world which originates from the Western and the Southwestern parts of the island.

**(20)**

**(Total for Question 7 = 20 marks)**

**TOTAL FOR SECTION C = 20 MARKS**
**TOTAL FOR PAPER = 100 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

**BLANK PAGE**



P 5 8 2 0 1 A 0 1 9 2 0

**BLANK PAGE**

**Question 1**
Sourced from: https://www.mykidsway.com/essay-writing/essay-on-school-picnic/

**Question 2**
© GCShuttes/Getty Images
© PeopleImages/Getty Images
© triloks/Getty Images

**Question 3**
Sourced from: http://www.bbc.com/tamil/india-43657566

**Question 4a**
Sourced from: https://benzerubbabel.wordpress.com

**Question 4c**
Sourced from: http://www.worksheetcloud.com/blog/the-debate-about-mother-tongue-education-what-you-should-know/

**Question 6**
© RajeshNarayan/Getty Images

**Question 7**
Sourced from: http://www.urlaub-sr-lanka.info/sri-lanka-holiday/2013/04/natural-attraction-in-sri-lanka/

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA